இந்து தமிழ் திசை
20.06.2025

# முக்குலத்தோர் வாக்குகளை பெறுவதற்குத்தான் முருக பக்தர்கள் மாநாடு

## மதுரையில் தொல்.திருமாவளவன் எம்.பி. குற்றச்சாட்டு

மதுரை

மதுரையை மையமாக வைத்து முக்குலத்தோர் வாக்குகளை பெறவும், அச்சமுதாயத்தினரை வளைத்துப்போடும் நோக்கத்தில் சங்பரிவார் அமைப்புகளால் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்தப்படுகிறது என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

மதுரை மதநல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு சார்பில் உலகத் தமிழ்ச் சங்கம் முன் மனிதச் சங்கிலி நேற்று நடைபெற்றது. வழக்கறிஞர் வாஞ்சிநாதன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், திரைப்பட இயக்குநர் அமீர், மக்கள் கண்காணிப்பக இயக்குநர் ஹென்றி டிபேன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் பேசியதாவது:



மதுரை மதநல்லிணக்க மக்கள் கூட்டமைப்பு சார்பில் நடந்த மனிதச் சங்கிலியில் தொல்.திருமாவளவன் எம்.பி., திரைப்பட இயக்குநர் அமீர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

வட மாநிலங்களைப்போல், தமிழகத்தில் கடவுள் முருகன் பெயரில் கலவரங்களை ஏற்படுத்த பாஜகவினர் முயற்சிக்கின்றனர். எல்லா கட்சியிலும் முருகனை வழிபடுவோர் உள்ளனர். இங்கு மதங்களின் பெயரால் கடவுளின் பெயரால் மக்களை பிளவுபடுத்த முடியாது. இதன் மூலம் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அரசியல் ஆதாயம் தேட திட்டமிடுகின்றனர். அந்த தொலைநோக்கு திட்டத்தின் அடிப்படையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்துகின்றனர். பாஜகவின் சூழ்ச்சியில் முருக பக்தர்கள் ஏமாந்துவிடக் கூடாது. இம்மாநாட்டுக்காக மதுரையை தேர்வு செய்தது, முக்குலத்தோர் வாக்குகளை பெறுவதற்குத்தான். தேர்தல் அரசியலில் பாஜக வுக்கு ஆதரவாக இந்து உணர்வுள்ளவர்களை எல்லாம் ஒன்று திரட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு நடத்தப்படுகிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியா குமரியில் நாடார் சமூகத்தினரை வளைத்துப்போட்டு விட்டோம். மதுரையை மையமாக வைத்து முக்குலத்தோர் சமுதாயத்தினரை வளைத்துப்போட வேண்டும் என்பதுதான் அவர்களது நோக்கம். அதற்கு யாரும் இரையாக மாட்டார்கள் என்பதை சொல்வதற்குத்தான் இந்த மனிதச் சங்கிலி போராட்டம். இந்த மண்ணில் வன்முறை ஏற்படக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் பேசுகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.